
### செயல்திறனற்ற

# வட மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்குவதா?

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு எதிர்ப்பு!

அமராவதி, பிப்.10-

செயல்திறனற்ற வட மாநிலங்களுக்கு, தென் மாநிலங்களைவிட அதிக நிதி ஒதுக்கும் ஒன்றிய அரசின் செயல் தவறானது என ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் தெரிவித்துள்ளார்.



அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசிய சந்திரபாபு நாயுடு, நாடு செழிக்க வேண்டுமானால் அனைத்து பகுதிகளும் செழிக்க வேண்டும் என்றும், மாநிலங்கள் கூட்டாளிகளே தவிர யாருக்கும் எதிரிகள் அல்ல என்றும் கூறினார்.

ஒன்றிய அரசின் கொள்கைகள் எப்போதும் செயல்திறனற்ற மாநிலங்களுக்கு சாதகமாக இருக்கக் கூடாது என்றும் மாநிலத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல வேண்டியது அந்தந்த மாநில அரசுகள், அரசியல் கட்சிகளின் பொறுப்பு என்றும் தெரிவித்த அவர், பின்தங்கிய மாநிலங்கள் படிப்படியாக தங்களை திருத்திக் கொள்வது தான் நல்ல அறிகுறி என்றும் தெரிவித்தார்.

## கேள்விக் கென்ன பதில் ?

**கேள்வி :**

எடப்பாடி பழனிசாமி, 'பிளவு' குறித்துச் சொல்லியிருக்கிறாரே ?

**பதில்:**

**மக்களை மத ரீதியாகப் பிளவு படுத்தி, மாநில வாரியாகப் பிரிவினைப் படுத்தி, மொழி ரீதியாகப் பேதப்படுத்தும் பிற்போக்கு சக்திகளுடன் இணைந்திருக்கும் எடப்பாடி, 'பிளவு' குறித்துப் பேசுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது ?**

# தூய்மைப் பணியாளர்களின் 'பசி போக்கும்' திட்ட விரிவாக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்... முதல் பக்கத் தொடர்ச்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திட பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், "தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்" தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, 09.12.2022 அன்று இத்திட்டம் முதலமைச்சர் அவர்களால் மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக தூய்மைப் பணியாளர்களுக்கு, நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சி, பாதுகாப்பு உபகரணம் வழங்குதல், சுகாதாரக் காப்பீடு, நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் தொடர் உடல்நல பரிசோதனைகள் மற்றும் மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் ஆகியன தடையின்றி பெறுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு திறன் மேம்படுத்துதல், மாற்று வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றினை தொடர்ந்து கண்காணிக்க 50 கோடி ரூபாய் அறக்கட்டளை நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்திட 14.08.2025 அன்று தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம், தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு வழங்கும் திட்டம், பணியின்போது உயிரிழக்கும் தூய்மைப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினர் சுயமாக தொழில் தொடங்குவதற்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடனுதவி, தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டம், தூய்மைப் பணியாளர்களுக்கு தாட்கோ நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களின் கீழ் உதவித் தொகை ஆகிய 6 புதிய சிறப்புத் திட்டங்களை முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தற்போது அத்திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது**

நகரங்களையும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளையும் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பேணிக் காக்கும் தூய்மைப் பணியாளர்கள் ஆரோக்கியமாக இருக்கவும், பணியாற்றும் சூழலில் பசியற்று இருக்கவும் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் காலை, மதியம் மற்றும் இரவு என சுழற்சி முறையில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டத்தை 15.11.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின்படி, தூய்மைப் பணியாளர்களுக்கு அவர்களுடைய பணிகளுக்கு இடையில்,உணவுவேளையில்சுவையும் ஆரோக்கியமும் நிறைந்த உணவு வழங்கப்படுகிறது. தூய்மையான முறையில் சமைத்து, உணவுக் கலனில் வைத்து, சூடு குறையாமல் இருப்பதற்கு வெப்பக் காப்புப் பையில் (Insulated Thermal Carrying Bag) எடுத்துச் செல்லப்பட்டு, தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றும் இடத்திற்கு அருகாமையிலேயே உள்ளாட்சி அமைப்புக்கு சொந்தமான கட்டிடத்தில் உணவு பரிமாறப்படுகிறது. இதன் மூலம் தூய்மைப் பணியாளர்களுக்கு குறித்த நேரத்தில் ஆரோக்கியமான உணவு கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

**தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் விரிவாக்கம்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் 15.11.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தற்போது அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் நேற்று (9.02.2026) விரிவுப்படுத்தி தொடங்கி வைத்து, வெப்பம் தாங்கும் பையில் வைக்கப்பட்ட உணவுக் கலன்களை தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கினார். இந்த விரிவாக்கத்திற்குப் பிறகு பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 25 மாநகராட்சிகள், 145 நகராட்சிகள் மற்றும் 479 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1,29,689 தூய்மைப் பணியாளர்களுக்கு தினந்தோறும் சுகாதாரமான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்கப் படும். தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றிற்கு 213 கோடியே 92 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, பணியின்போது உயிரிழந்த தூய்மைப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிதியுதவி, தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினர் சுயமாக தொழில் தொடங்குவதற்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடனுதவி, தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கினார்.

முன்னதாக, தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டத்திற்காக உணவு கொண்டு செல்லும் வாகனங்களின் சேவைகளை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சந்திரன், வி.ஜி. ராஜேந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன், சுதர்சனம், கிருஷ்ணசாமி, கணபதி, துரை சந்திரசேகர், உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர்

எம். பிரதீப் குமார், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ். கந்தசாமி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டாடா குழுமத்திற்கு முழு ஆதரவு தருவோம்! முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

ஆட்டோமொபைல், நுகர்வோர் பொருட்கள், ஹாஸ்பிட்டாலிட்டி, தொலைத்தொடர்பு... இப்படி, பல துறைகளில் தடம்பதித்து, மிகப் பெரிய சாதனைகளை படைத்திருக்கக்கூடிய நிறுவனம் தான் நம்முடைய டாடா குழுமம்!

உலக அளவில் பல்வேறு நாடுகளில் செயல்பட்டு வரும் இந்திய பன்னாட்டு குழுமமாக டாடா நிறுவனம் இருக்கிறது! டாடா என்று சொன்னாலே அதற்கு ஒரு பிராண்ட் வேல்யூ உண்டு! அப்படிப்பட்ட டாடா நிறுவனத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் ஆழமான உறவும் இருக்கிறது.

**தமிழ்நாட்டின்மீது டாடாவின் நம்பிக்கை!**

TCS நிறுவனம், தாஜ் ஹோட்டல்கள், டைட்டன், டாடா பவர், டாடா எலக்ட்ரானிக்ஸ் இவையெல்லாம் அந்த உறவுச் சரித்திரத்தின் பொன் ஏடுகள். டாடா நிறுவனம், தமிழ்நாட்டின்மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் பெருமைமிகு அடையாளங்கள்.

இந்தியாவின் வாகன உற்பத்தி மையம் என்றால் அது தமிழ்நாடுதான்! அதுமட்டுமா! மின்வாகன உற்பத்தியின் தலைநகரமும் தமிழ்நாடு தான்! மோட்டார் வாகனத் துறையில், தமிழ்நாடு இன்றைக்கு 'Top Position'இல் இருக்கிறது என்றால், அதற்கு பெரிய பாரம்பரியம் இருக்கிறது. உலகத் தரம் வாய்ந்த பல கார் உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களின் திட்டங்களை எல்லாம் நிறுவியிருக்கிறார்கள். அதேபோல், டாடா மோட்டார்ஸ், உலகளவில் முன்னணி வாகன உற்பத்தி நிறுவனமாகவும், மின் வாகனத் துறையில், ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறது.

பன்னாட்டுத் தர வரிசைகளில் கடைப்பிடித்து, குவாலிட்டி மற்றும் நம்பகத்தன்மை மிக்க வாகனங்களை உள்நாட்டு சந்தைக்கும், உலக சந்தைக்கும் டாடா மோட்டார்ஸ் வழங்கி வருகிறது. இப்படிப்பட்ட பயணத்தின் அடுத்தகட்டமாக, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, இந்த ஆலையை நிறுவ நீங்கள் முன்வந்திருப்பது எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சியாக இருக்கிறது.

TATA-JLR ஆலை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டம்! ஏன் தெரியுமா? இந்த தொழிற்சாலையில், டாடா நிறுவனம் உலகத் தரம் வாய்ந்த ஜாகுவார் லாண்ட் ரோவர் சொகுசு கார்களை உற்பத்தி செய்யப் போகிறார்கள். உலகப் புகழ் பெற்ற ரேஞ்ச் ரோவர் Evoque தயாரிக்கப்பட்டு இன்றைய தினம் வெளியிடப்பட்டிருக்கிறது.

உயர் தொழில்நுட்பங்களை தன்னகத்தே ஏற்று, உலக அளவில் எந்த நாட்டின் தயாரிப்புகளோடும் போட்டியிடக்கூடிய வாகனங்களை உருவாக்கும் திறன் தமிழ்நாட்டிற்கு உண்டு என்பதை வெளிப்படுத்துவதாக இந்த ஆலை அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வேறு எங்கும் பார்க்க முடியாத ஒரு தனித்தன்மை உண்டு! அது என்னவென்றால், அனைத்து மாவட்டங்களிலும் சீரான, பரவலான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைந்த மாநிலம் என்பதுதான்! இதை என்னால் உறுதியாக சொல்ல முடியும். தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் தயாரிப்புகள், உலக சந்தைகளுக்கும் சேர்த்தே தயாரிக்கப்படுகிறது என்பதற்கான பெருமைமிகு அடையாளம்தான் இந்த ஆலை!

> **இந்தியாவின் வாகன உற்பத்தி மையம் என்றால் அது தமிழ்நாடுதான்! அதுமட்டுமா! மின்வாகன உற்பத்தியின் தலைநகரமும் தமிழ்நாடுதான்! மோட்டார் வாகனத் துறையில், தமிழ்நாடு இன்றைக்கு 'Top Position'இல் இருக்கிறது என்றால், அதற்கு பெரிய பாரம்பரியம் இருக்கிறது. உலகத் தரம் வாய்ந்த பல கார் உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களின் திட்டங்களை எல்லாம் நிறுவியிருக்கிறார்கள். அதேபோல், டாடா மோட்டார்ஸ், உலகளவில் முன்னணி வாகன உற்பத்தி நிறுவனமாகவும், மின் வாகனத் துறையில், ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறது.**

வளர்ந்து வரும் புதிய துறைகளிலும் நாம் நுழைந்து சிறப்பாக செயல்பட வேண்டும். ஏற்கனவே, நாம் லீடராக இருக்கும் துறைகளில், மேலும் உயர்ந்த தரத்தையும், இன்னும் பெரிய சாதனைகளையும் Achieve செய்ய வேண்டும். இதற்காகத்தான் ஸ்பெஷல் கவனத்துடன் திராவிட மாடல் அரசு உழைத்துக்கொண்டிருக்கிறது.

எலக்ட்ரானிக்ஸ், மோட்டார் வாகனம், டெக்ஸ்டைல், I.T, R&D, G.C.C என்று பன்முகப்படுத்தப்பட்ட மாநிலமாக உலக அரங்குகளில், தமிழ்நாடு தன்னை அடையாளப்படுத்தி இருக்கிறது. என்னை பொறுத்தவரை, தொழில்துறை அமைச்சருக்கு நான் எப்போதும் சொல்வது, MoU Sign மட்டும் செய்தால் போதாது, அதை ஃபாலோ செய்து, முதலீடாக மாற்ற வேண்டும்! அப்படி, முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்ல, அதை விரைந்து செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்! அப்போதுதான் நாம் பெருமைப்பட முடியும். அப்படித்தான் நம்முடைய அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா செயல்பட்டு வருகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் நான் தொடர்ந்து திறந்து வைத்துக்கொண்டிருக்கும் தொழில் திட்டங்கள்! அவருக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

சில நாட்களுக்கு முன்பு. கும்மிடிப்பூண்டியில் மிட்சுபிஷி ஆலையை திறந்து வைத்தேன். இப்போது இந்த டாடா JLR ஆலை! 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம்தான் இந்தத் திட்டத்திற்கான (MOU) புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டோம். சிப்காட் நிறுவனமும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து, சில மாதங்களிலேயே 1207 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தினார்கள். இது ஒரு மிகப் பெரிய சாதனை. ஆறே மாதத்தில் செப்டம்பர் 2024 இந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினோம். 18 மாதங்களில் முடிக்கலாம் என்று நம்முடைய சந்திரசேகரன் அவர்கள் சொன்னார்; நான் இப்போது 16வது மாதத்திலேயே முடித்து இப்போது தொடக்க விழாவையும் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதுதான் பெரிய பெருமை!

**பணியாற்றிக் கொண்டே படிக்கவும் உதவுகிறோம்!**

இதேபோல, தூத்துக்குடியில், வின்ஃபாஸ்ட் நிறுவனமும் அடிக்கல் நாட்டிய 16வது மாதத்திலேயே உற்பத்தியை தொடங்கிவிட்டார்கள். இது போன்ற பெரிய பிராஜக்ட் எல்லாம் தொடங்க வேண்டும் என்றால், பொதுவாக 3 அல்லது 4 வருடங்கள் ஆகும். ஆனால், தமிழ்நாட்டில், இந்த காலகட்டத்தை நாங்கள் பாதியாக குறைத்திருக்கிறோம். தமிழ்நாடு எந்தளவிற்கு தொழில் செய்ய உகந்த, எளிமையான மாநிலமாக இருக்கிறது என்பதற்கு, இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

இதை நான் விரும்புவது, தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய இளைஞரிடத்தில் கேட்டேன். டிப்ளமோ முடித்த நம்முடைய இளைஞர்கள் பலர் இந்த திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் எல்லோரும் டாடா மோட்டர்ஸ் நிறுவனத்தின், 'லட்சியா' என்ற திட்டத்தின்கீழ் பயிற்சி பெறுகிறார்கள். அந்த கையேட்டை கூட என்னிடத்தில் சந்திரசேகரன் அவர்கள் வழங்கினார்கள். இந்த திட்டத்தில் வேலை செய்துகொண்டே, பி. டெக்., பட்டம் படிக்கவும் இந்த நிறுவனமே உதவி செய்கிறார்கள்.

இந்த தருணத்தில் இன்னொரு செய்தியையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய திராவிட மாடல் அரசின் செயல்பாட்டுத் திறனை உலகத்திற்கு எடுத்து சொல்ல, 'முதலீடுகள் செயல்பாட்டு மாநாடு', அதாவது, 'Conversion Conclave' இன்னும் சில நாட்களில் நடத்தப் போகிறோம். கிட்டத்தட்ட 100 திட்டங்கள் செயல்பாட்டிற்கு வருவதை நீங்கள் அப்போது தெரிந்துகொள்வீர்கள். திட்டங்களை தொடங்கி வைப்பது, அடிக்கல் நாட்டுவது என்ற வகையில், MoU கன்வெர்ஷனில் நாங்கள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறோம் என்று வெளிப்படுத்தப் போகிறோம்!

தமிழ்நாட்டின் விரைவான செயல்பாடுகள், குறித்த நேரத்தில் கிடைக்கின்ற அனுமதிகள் மற்றும் ஒப்புதல்கள், வணிகம் புரிவதை எளிதாக்கும் செயல்பாடுகள் எல்லாவற்றையும், இந்த மாநாட்டில் காட்டப் போகிறோம். தமிழ்நாடு அரசு ஒரு கேரண்டி கொடுத்தால், அதை எப்படி காப்பாற்றுகிறோம் என்று உலக முதலீட்டாளர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கு போட்டி மாநிலம் என்பதையெல்லாம் தமிழ்நாடு எப்போதோ க்ராஸ் செய்துவிட்டது. இப்போது உலக நாடுகளே தமிழ்நாட்டுடன் போட்டி போடக் கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கிறது!

இது, நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய முன்னேற்றம். இந்த சிறப்பான தருணத்தில், இந்திய வாகனத் துறையின் வளர்ச்சிக்கும், இந்திய மிடில் க்ளாஸ் குடும்பங்களின் கனவுகளை நிறைவேற்றவும், மறைந்த ரத்தன் டாடா அவர்கள் ஆற்றிய பங்களிப்புகளை மிகுந்த மரியாதையுடன் நான் நினைவுகூர விரும்புகிறேன். அவர் கண்ட கனவுப்படியே, டாடா மோட்டார்ஸ் தமிழ்நாட்டில் மேற்கொள்ளும் இந்த முதலீடு, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் 'புதிய எரிசக்தி வாகனத் துறை'யின் வளர்ச்சிக்கு வலுவான ஊக்கமாக அமையும்.

இந்த விழா மூலமாக நாம் பெற்றிருக்கும் நல்லுணர்வை தொடர்ந்து செயல்படுத்தும் வகையில், டாடா குழுமம், தனது பல்வேறு தயாரிப்புகளுக்கான முக்கிய உற்பத்தி மையமாக தொடர்ந்து தமிழ்நாட்டையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நாங்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம். எந்தத் துறையில் நீங்கள் முதலீடு செய்தாலும், அதற்கு நாங்கள் முழு ஆதரவு வழங்குவோம்! திட்ட செயல்பாடுகளை எளிமையாக்கி, அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம்! திராவிட மாடல் அரசை நீங்கள் முழுமையாக நம்பலாம்.

எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தரும் முதலீடுகளை யார் மேற்கொள்ள வந்தாலும், அவர்களை திறந்த மனதோடும், திறந்த கரங்களோடும் தமிழ்நாடு நிச்சயமாக வரவேற்கும்.

தமிழ்நாடு வந்தாரை வாழ வைக்கும்! அதுதான் எங்கள் பண்பாடு! அதுதான் எங்கள் பாரம்பரியம்! தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்தன்மை வாய்ந்தது! பொருளாதார வளர்ச்சியுடன் சமூக நீதியை உள்ளடக்கியது! பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது! எங்களின் இந்த நல் முயற்சிகளுக்கு டாடா மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் பக்கபலமாக இருக்க வேண்டும்!

நிறைவாக, மதிப்பிற்குரிய சந்திரசேகரன் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்! நீங்கள் டாடா நிறுவனத்தை எந்த அளவிற்கு நேசிக்கிறீர்களோ, அதே அளவு தமிழ்நாட்டையும் நேசிக்கிறீர்கள் என்று எங்கள் எல்லோருக்கும் தெரியும்! ஏனென்றால், நீங்கள் தமிழ்நாட்டின் நாமக்கல்லைச் சேர்ந்தவர் என்ற உரிமையுடன் உங்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன். இன்னும் பல புதிய தொழிற்சாலைகள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு திட்டங்களையும் நீங்கள் தமிழ்நாட்டிற்கு கொண்டு வர வேண்டும். அடுத்த போர்டு மீட்டிங்லேயே இது தொடர்பாக முடிவெடுப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய உங்களுக்கு தேவையான எல்லா உதவிகளையும் நாங்கள் நிச்சயம் செய்து தருவோம். வேறு எந்த மாநிலத்தையும் விட சிறந்த உட்கட்டமைப்பு, திறமையான மனிதவளம், அமைதியான சூழல், வெளிப்படையான நிர்வாகம் கொண்ட தமிழ்நாடுதான், எப்போதும், எதிலும் டாடாவின் 'முதல் சாய்ஸ்'ஆக இருக்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.